DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM.

<table>
<tr><td colspan="2">Case No</td><td>:</td><td colspan="3">O.S :55/2019</td></tr>
<tr><td colspan="2">Deposition of Witness</td><td>:</td><td colspan="3">பி.சா.2</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td>திரு. பிரபு</td><td rowspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">பில்டிங் கான்ட்ரக்டர்</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td>சிவானந்தம்</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td>லால்குடி, திருச்சி</td><td rowspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">40</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td></td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 04-03-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 3.20**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 4ம் பிரதிவாதி. என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்திருக்கிறேன். அபுபக்கர் ராவுத்தர் அபு பீவி அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் பட்டியில் தாக்கல் செய்துள்ளேன். 19.05.1992ம் வருடத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் கணினி நகல் பி.சா.ஆ.1 ஆகும். சாந்தி என்பவர் மதம் மாறிய சான்றின் நகல் தாக்கல் செய்கிறேன். 10.09.2004ல் அவருக்கு திருமணம் நடைபெற்றதற்கான நிக்கா சான்றின் நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி நபர் எங்கு வசிக்கிறார் என்பதற்கு ஜமாத்தில் கொடுத்த சான்று தாக்கல் செய்கிறேன். தாவா சொத்திற்கான சிட்டா நகல், பட்டா நகல் தாக்கல் செய்கிறேன். 09.06.2015 அன்று ரீமா பேகம் தன்னுடைய மகள் பர்கத்நிஷா பேகத்திற்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் கணினி நகல் பி.சா.ஆ.2 ஆகும். 07.03.2016 அன்று ராமச்சந்திரனுக்கு

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

ரீமா பேகம், பரகத்நிஷா எழுதிக்கொடுத்த பத்திரத்தின் கணினி நகல் பி.சா.ஆ.3 ஆகும். 01.01.2016 முதல் 21.04.2016 வரைக்கான திருப்பனந்தாள் சார்பதிவாளர் வழங்கிய வில்லங்க சான்று பி.சா.ஆ.4 ஆகும். 13.11.2009 முதல் 07.02.2018 வரைக்கான திருப்பனந்தாள் சார்பதிவாளர் வழங்கிய வில்லங்க சான்று பி.சா.ஆ.5 ஆகும். 12.12.2017 அன்று எனக்கு ராமச்சந்திரன் எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தின் கணினி நகல் பி.சா.ஆ.6 ஆகும். என் பெயரில் உள்ள கணினி 10(1) பட்டா நகல் பி.சா.ஆ.7 ஆகும். 1428 பசலிக்கான என் பெயரில் உள்ள சாகுபடி கணக்கின் அடங்கல் நகல் தாக்கல் செய்கிறேன். தாவா புல எண்ணிற்கான புலப்படம் நகல், பரகத் நிஷா ஜாதி சான்றிதழ் நகல், பட்டா மாறுதல் உத்தரவு நகல் ஆகியவை தாக்கல் செய்கிறேன்.

**முடிக்கப்பட்ட நேரம்: 3.32**

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.